செ.வெ.எண்.313/2009, நாள்:19-09-2009

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 134 பயனாளிகளுக்கு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்பட்ட மனுக்கள் மற்றும் துணை முதலமைச்சர் அலுவலகத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினை தொடர்ந்து, காஞ்சிபுரம் மாவட்டத்தை சேர்ந்த 105 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப்பட்டாக்களும், 6 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விவசாய கூலித் தொழிலாளர் உதவித் தொகையும், 21 பயனாளிகளுக்கு ஆதரவற்ற விதவை உதவித்தொகையும், 2 பயனாளிகளுக்கு உடல் ஊனமுற்றோர் உதவித் தொகையும் ஆக மொத்தம் 134 பயனாளிகளுக்கு ரூ.17.83 இலட்சம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சரின் முதன்மைச் செயலர் திரு.தீனப்பந்து இ.ஆ.ப., துணைச்செயலர் திரு.ரகுபதி இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப., முதலமைச்சரின் தனிப்பிரிவு தனி அலுவலர் திரு.டி.பி.ராஜேஷ், முதலமைச்சர் செயலக தனி அலுவலர் திரு.ஜெ.ஜெயகாந்தன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.நம்பிராசன், சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.இராஜா மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உடன் இருந்தார்கள்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்